முதலமைச்சர் கோப்பை 2024 - சென்னை மண்டலம்

# மாவட்ட அளவில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ் - பதக்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, செப்.29-

சென்னை மண்டல மற்றும் மாவட்ட அளவில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை 2024 "விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்ற வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (28.09.2024) சென்னை, பெரியமேடு, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைக்கும் விதமாக சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் 10.09.2024 அன்று தொடங்கி வைத்தார்.

சென்னை மாவட்டத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மண்டல மற்றும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை - 2024 விளையாட்டுப் போட்டிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 10.09.2024 அன்று நேரு உள்விளையாட்டு அரங்க வளாகத்தில் தொடங்கி வைத்தனர்.

சென்னை மாவட்ட அளவில் 62,452 வீரர், வீராங்கனைகளிடமிருந்து இணைய வழி மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கம், நேரு விளையாட்டு அரங்கம், எம்.ஆர். கே.ஹாக்கி விளையாட்டு அரங்கம், ஏ.ஜி.பி. காம்ப்ளெக்ஸ், சென்னை பல்கலைக்கழக மைதானம், புதூர்அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, டான் பாஸ்கோ உயர்நிலைப் பள்ளி, கால்நடை மருத்துவக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி, புனித ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்றது.

கடந்த 10.09.2024 முதல் 24.09.2024 வரை நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி, மாற்றுத்திறனாளிகள், பொதுப் பிரிவினர் மற்றும் அரசு பணியாளர்கள் என 5 பிரிவுகளில் ஆண் / பெண் இருபாலரும் பங்கு பெற்றத்தில், 16,607 மாணவர்கள்/ஆண்கள், 8,812 மாணவிகள்/பெண்கள் என மொத்தம் 25,419 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

சென்னை மண்டல வாரியாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில், கடற்கரை கையுந்து பந்து (Beach Volleyball), குத்துச் சண்டை (Boxing), பளுத்தூக்குதல் (Weightlifting), வாள்விளையாட்டு (Fencing), ஜூடோ (Judo), டென்னிஸ் (Tennis) ஆகிய விளையாட்டுப் போட்டிகளில், பள்ளி மற்றும் கல்லூரி பிரிவுகளில், 1,089 மாணவர்கள், 417 மாணவிகள் என மொத்தம் 1506 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட மற்றும் மண்டல அளவிலான "முதலமைச்சர் கோப்பை2024" விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற 2,830 வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் இன்று (28.09.2024) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு, மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளில் தனிநபர் போட்டிகளில் முதல் இடத்தை பெற்றவர்களும், குழுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட அணியின் வீரர், வீராங்கனைகளும், மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டியில் முதல் நான்கு இடத்தை பெற்ற வீரர், வீராங்கனை களும் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். மேலும், இவர்களுக்கான மாநிலப் போட்டிகள் சென்னை, செங்கல்பட்டு, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் வரும் 04.10.2024 அன்று தொடங்கி 24.10.2024 வரை நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, நியமனக் குழு உறுப்பினர் சொ. வேலு மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை!

சென்னை, செப்.29-

சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 133வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், 29.09.2024 இன்று காலை 9.30 மணியளவில் சென்னை, தங்கசாலை, மணிக்கூண்டு அருகில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

சென்னை முன்னாள் மேயர் சிவராஜ் அவர்கள் 1892ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29ஆம் நாள் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் உயர்கல்வி பயின்று 1916ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்குரைஞரானார். சென்னை மற்றும் அண்ணாமலை பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

ஆதிதிராவிட மகாஜன சபை, நீதிக் கட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகிய இயக்கங்களில் இணைந்து பணியாற்றி சாதி ஒழிப்பு, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார். தம் வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகக் கடுமையாக உழைத்துள்ளார்.

**சட்ட மேலவை உறுப்பினர்!**

சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினராக 1926 முதல் 1937 வரையும், 1945 - 1946ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகரத்தின் மேயராகவும் விளங்கியுள்ளார். ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்த முதல் மேயர் என்ற பெருமை இவருக்கு உண்டு. நமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக 1957 - 1961 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் மறைவுக்குப் பின் இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார். சென்னை மாநகர் முன்னாள் மேயர் சிவராஜ் அவர்கள் கட்டாயக் கல்வியை நடைமுறைப் படுத்துவதற்கு அரும்பாடு பட்டார். மாநகராட்சிப் பள்ளியில் அனைத்துத் தரப்பினரும், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களும் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு நான்கு தனி அலுவலர்களை நியமித்து, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக் கண்களைத் திறந்து வைத்தார்.

அன்பு நெறியை தனது வாழ்வியல் நெறியாகக் கடைப்பிடித்து தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்ட அன்னார் அவர்கள் 1964 செப்டம்பர் 29 அன்று இயற்கை எய்தினார். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அவருடைய பிறந்த நாளான செப்டம்பர் 29ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஜெ.கௌரீஸ்வரன் தலைமை! 53 (அ) வட்ட அவைத் தலைவர் இ.மதிவாணன் தாயார்

# மீனாம்பாளின் 16ஆம் நினைவு நாள் அஞ்சலி - திருவுருவப் படம்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி!



சென்னை, செப். 29

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்குப் பகுதி, 53 (அ) வட்டக் கழக அவைத் தலைவர் இ.மதிவாணனின் தாயார் மீனாம்பாள் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு படத்திறப்பு நிகழ்ச்சியை இன்று (29.9.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணிக்கு மேல், எண்: 27, ராம்தாஸ் நகர், வண்ணாரப்பேட்டையில் நடைபெறுகிறது.

53 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஜெ.கௌரீஸ்வரன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திருவுருவப் படத்தினை திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி, இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், 53 வது மாமன்ற உறுப்பினர் பா. வேளாங்கண்ணி, பால லட்சுமணன், எஸ்.புகழேந்தி, கொரியர் பி.முருகன், இரா. பாலன், எம்.எல்.ரவி, எம். கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், ப. சோமசுந்தரமூர்த்தி, ஆர்.வி. லட்சுமி வேலு, ஜி.எஸ்.முருகன், கே.முனுசாமி, ஏ.பாஸ்கர், பி.ஆகி பிரகாஷ், ஆர். வாசு, இ.ரகு, கே.கோபி, டபல்யு.ஏ.சார்லஸ், க.ஜெயசீலன், எம்.செந்தில்குமார், எஸ்.ரமேஷ், எம்.கிருஷ்ணன், ஜெ.குணாளன், எஸ். சங்கர், எஸ்.அசோக், ஏ.சாந்தகுமார், எஸ்.எம்.சாமி, பொ.அழகேசன், கோ.அண்ணாதுரை, மாஸ்டர் டி. நாராயணன், இரா.மெய்யழகன், ஆர்.பி.சேகர், எஸ். செல்வநாதன், எல்.ஜி.பார்த்திபன், எம்.விஜய சண்முகம், சி.தமிழ் தென்றல், டி. கலைவாணி, பி.அனிதா, ஷீலா சேகர், எஸ்.கயல்விழி, சி.தமிழ்தென்றல், ஏ.சாந்த குமார், யு.பி.ஜெயராமன், எம்.கலைவாணன், பி. கோபி, குட்டி (எ) ஏ.அருண் குமார், ஏ.அகஸ்டின், கே. உமாபதி, பி.தாஸ், எம். கோபி, ஐ.கார்த்திக் பாய், மு. தினேஷ், ஐ.கார்த்திகேயன், மிரர் மாரி, பி.கருணாகரன், பி.டெல்லி கணேஷ், எஸ்.வடிவேலன், பி.அன்பு, பி.ஜெகன், ஜி.மணிகண்டன், எம்.மணிமேகலை, எச்.கதிர் அகமது, டி.வெங்கடேசன், இ.தமிழ்ச்செல்வி, சி.டி.ராஜா, ஏ.பி.ராஜ்கமல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.

53 (அ) வட்ட துணைச் செயலாளர் ஏ.சக்திவேல் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியம், திருமணம் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 32 லட்சத்து 12 ஆயிரம் மதிப்பில் புதிய சாலை அமைப்பதற்கான பணி தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கி புதிய சாலை அமைப்பதற்கான பணியை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இதனைத் தொடர்ந்து திருமண ஊராட்சியில் ரூ. 34 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டட பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, ஊராட்சி ஒன்றிய ஆணையர் க.வெங்கடேசன், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெ.சாக்ரடீஸ், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரெகனா பேகம், ஒன்றிய பொறியாளர் பபிதா, ஒன்றிய நிர்வாகிகள் கட்டத்தொட்டி எம்.குணசேகரன், ப.கந்தன், ஜி.சுகுமார், வை.முனிவேல், ஜி.பி.பரணிதரன், இ.பிரதீப், ஜி.பிரவீன்குமார், டி.மணிவண்ணன், சர்மன் ராஜ், மு.தே.ராஜேஷ், சிபி, பிரசாத், மதன், வடிவேல், ஜெயபாரதி, பழனி, ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு,

# கழகத் தோழர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) - பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - வாக்காளர் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 1-1-2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29-10-2024 அன்று வெளியிட உள்ளது. சென்னை தெற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29-10-2024 முதல் 28-11-2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2025அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்கப் படிவம் 6 பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்பதற்கு www.nvsp.in மற்றும் www.voterportal.eci.gov.in எனற இணயதளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் - 6 ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் காலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

1. **வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29- 10- 2024**
2. **பெயர்களைச் சேர்க்க/நீக்க/ திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29 -10- 2024 முதல் 28- 11- 2024 வரை.**
3. **சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள்.**
4. **இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 6- 1- 2025**

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், சென்னை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மண்டல குழுத்த தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOக்களுடன் உடனிருந்து கண்காணிக்க கேட்டுக்கொள்கிறேன்.**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர்
சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில்

# அ.தி.மு.க. நிர்வாகிகள் 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் முன்னிலையில்!

திருவள்ளூர், செப். 29

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட சாமந்தவாடா கொல்லாலகுப்பம், புண்ணி யம், பாண்டுரவேடு ஆகிய ஊராட்சிகளில் சேர்ந்த அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் மகளிர்கள் அக்கட்சியிலிருந்து விலகி பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வழக்கறிஞர் சி.ஜெ.சீனிவாசன் ஏற்பாட்டில் கழகத்தில் இணைப்பு விழா திருத்தணி மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் அ.தி.மு.க. கட்சி சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்கள்.

இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ரவீந்திரநாத், வி. கிஷோர், மாவட்ட பிரதிநிதிகள் டி.செங்கையா, சி.பி. முத்து, ஒன்றிய நிர்வாகிகள் ஆஞ்சிநேயன், திருமலை லோகநாதன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜே.தண்டபாணி, கிளைச் செயலாளர்கள் தாமோத ரன், பரசுராமன், ஜானகிராமன், குமார் கோவர்தனம், சந்திரபாபு, ஆகியோர் கலந்து கொண்டனர்

அப்போது அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வில் இணைந்த நிர்வாகிகள் பேசுகையில் அ.தி.மு.க. ஆட்சியின் போது திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட திருத்தணி தொகுதியில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஏழை எளிய மக்களுக்கு தேவையான திட்டங்களை அ.தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தவில்லை. அது மட்டுமல்லாமல் அ.தி.மு.க.வில் தலைமை சார்ந்த நிர்வாகிகள் நான்கு அணியாக செயல்படுகிறார்கள். எங்களிடம் பெரும் குழப்பத்தில் உள்ளது.

பா.ஜ.க.விற்கு கைக்கூலிகளாக மாறி சுய நினைவு இல்லாமல் அவர்கள் சொல்லும் சொல்லை தாரக மந்திரமாக ஏற்று செயல்பட்ட அ.தி.மு.க.வினரை மக்கள் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்று தற்போது நடைபெறும் தி.மு.க. ஆட்சியின் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு திட்டங்கள் நேரடியாக சென்று சேர்கின்றது. முதல்வர் செய்யும் பணிகளை பார்க்கும் போது எங்களையும் தி.மு.க.வில் இணைத்துக் கொள்ள முடிவு செய்ததாக தெரிவித்தார்கள்.



கத்தார் திராவிட முன்னேற்றக் கழகம் அயலக அணி (NRTIA) சார்பாக நடத்தும் கழக பவள விழா, முப்பெரும் விழா மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி (தலைவர் கழக அயலக அணி) ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.